1993 பிப்ரவரி 8]

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டக் கேள்விக்கிணங்க, அதாவது மீன்துறை இலாகாவிலிருந்து அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. ஆகையால்தான் 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லையென்றாலும், அவர்களுக்கு எத்தனை 'போட்' இருக்கிறது என்பதைப் பார்த்து, அமைச்சர் சொல்லும்போது 94 'போட்'களுக்கு என்று சொன்னார்; உண்மையிலேயே 1,700 அல்ல; 2,000-க்கும் மேற்பட்ட 'போட்'டுகள் அங்கே இருக்கின்றன. எல்லா போட்டுகளுக்கும் இந்த அளவுக்கு குறிப்பாக இவ்வளவு மண்ணெண்ணெய் கொடுப்போம் என்று சொல்கிறபடி, தனி அட்டை — 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லாவிட்டாலும்கூட — தனி அட்டை மூலமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அவர்களுக்கு என்று தனியாக 'பெர்மிட்' மூலம் வழங்கிக் கொண்டு வருகிறோம். பலபேர் அங்கே இருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் என்றாலும், அவர்கள் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள், முயற்சி எடுத்து விண்ணப்பம் போடுவார்களேயானால், நிச்சயமாக அனைவருக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 14, திரு ஜி. பழனிசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

14—

தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலை வாய்ப்பு அளித்தல்.

*13313—திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

53—435—5

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் கல்வி நிலையங்களில் பயின்ற மாணவர்கள், அரசு வேலை வாய்ப்பு மையங்களில் பதிவு செய்திருந்தால், அவர்களுடைய கல்வித் தகுதி, வயது, பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியான காலியிடங்கள் பெறப்படும்பொழுது, வேலையளிப்போருக்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றனர்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் பயில்கின்ற மாணவர்களுக்கு, வேலைவாய்ப்பு இடங்களில் காலியிடம் இருந்தால், அவர்களுக்கும் அளிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால், பொதுவாக அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது அரசு மூலமாக நடத்தப்படுகிற அந்தக் கல்விக்கூடங்களில் பயின்றவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழகத்திலே, இதுபோன்ற தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் தெருக்கள்தோறும் இன்றைய தினத்திலே நடத்தப்படுகின்றன. ஏழை எளிய மாணவர்கள் இன்றைய தினத்திலே அதிலே பெருவாரியான ரூபாய்களைச் செலுத்தி, பயின்று கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ? ஏனென்று சொன்னால், அரசு வேலை தேடுகின்ற அலுவலகத்திலிருந்த அவர்களுக்கு 'இண்டர்வியூ' அனுப்புகிறபோது, இதுபோன்றவர்களுக்கு 'இண்டர்வயூ' அனுப்புவதில்லை. ஆக, இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா, உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொழிற்பயிற்சிக் கல்வி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சிக் கல்வி நிலையங்கள் என்று வேறுபாடு பாராது அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்கள் என்பதால் எந்த உரிமையும் மறுக்கப்படமாட்டாது, சீனியாரிட்டி அடிப்படையில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 15, திரு. சி. தாமோதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். உறுப்பினர் இருக்கையில் இல்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 பிப்ரவரி 8]

வினா எண்.16, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

16

மொடக்குறிச்சி தொகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

*11759—திருமதி கவிநிலவு தர்மராஜ் :
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதியில், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி கிராமப்பகுதி என்பதால் அங்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அடுக்குமாடி வீடுகள் கட்ட இயலாது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி கிராமப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலும், ஈரோடு தாலூக்காவுக்கு உட்பட்ட காரணத்தினாலும், இதுவரை அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல உண்மைதான். இருந்தாலும்கூட, 5 இலட்சம் வாக்காளப் பெருமக்களைக் கொண்ட மொடக்குறிச்சி தொகுதி ஈரோடு தாலூக்காவுக்கு உட்பட்டிருந்தாலும் கூட, விவசாய நிலங்கள் அங்கு நிறைய இருக்கிற காரணத்தினாலும், இதய தெய்வம் பொலிவுடைத் தலைவி, புரட்சித் தலைவியின் ஆட்சியிலே 1 இலட்சம் பேருக்கு நடப்பு ஆண்டில் வீடுகட்டிக் கொடுக்கிற உன்னதத் திட்டம் இருக்கிற காரணத்தினாலும், வீடு இல்லாதவர்களை அதிகபட்சமாகக் கொண்டிருக்கிற கிராமப் பகுதியாகிய மொடக்குறிச்சி பகுதியிலே, அது தனித் தாலூக்காவாக இல்லாத காரணத்தினால், வீடு இல்லாதவர்கள் இலட்சக் கணக்கிலே இருக்கிற காரணத்தினால், நம்முடைய புண்ணியத் தலைவியினுடைய அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து நாங்கள் அரசுக்குரிய நிலங்களைத் தேர்வு செய்து கொடுப்போமேயானால் அந்த இடங்களிலாவது அடுக்கு மாடிக் கட்டிங்கள் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.